அறிமுகம்

பாராளுமன்றச் செயலகமானது பாராளுமன்றச் செயலாளர் நாயகம், பாராளுமன்றப் பிரதிச் செயலாளர் நாயகம், பாராளுமன்ற உதவிச் செயலாளர் நாயகம் ஆகியோரைக் கொண்டுள்ளது.

படைக்கலச் சேவிதர் திணைக்களம், நிருவாகத் திணைக்களம், சட்டவாக்கச் சேவைகள் திணைக்களம், நிதி மற்றும் வழங்கல்கள் திணைக்களம், ஹன்சாட் திணைக்களம், உணவு வழங்கல், வீடு பராமரிப்புத் திணைக்களம், இணைப்புப் பொறியியலாளர் திணைக்களம், தகவல் முறைமைகள் முகாமைத்துவத் திணைக்களம் மற்றும் தொடர்பாடல் திணைக்களம் ஆகிய 09 திணைக்களங்கள் பாராளுமன்றச் செயலகத்தின் கீழ் இயங்குகின்றன

பாராளுமன்றப் பணியாளர் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பணியாளர் ஆலோசனைக் குழு (SAC), பணியாளர் சம்பந்தமான விடயங்களில் பாராளுமன்றச் செயலகத்துக்கு ஆலோசனையும் வழிகாட்டலும் வழங்குகின்றது. சபாநாயகர் (தவிசாளர்), சபை முதல்வர், நிதி அமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரை பணியாளர் ஆலோசனைக் குழு கொண்டுள்ளது.

செயலகக் கட்டமைப்பு வரைபடம்